அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.273/2015,
தேதி. 12.11.2015

## தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மத்திய அரசு போதுமான நிவாரணத் தொகையை தாராளமாக வழங்க வேண்டும் ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்

சமீபத்தில் பெய்த கனமழையைத் தொடர்ந்து, கடலோர மாவட்டங்களில் குறிப்பாக் கடலூர்.வுழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் பெருமளவு பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளது வேதனைக்குரியது.

மேலும், மேற்கண்ட மாவட்டங்களில் மழை வெள்ளம் காரணமாக நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்ததோடு, ஆயிரக்கணக்கான கால்நடைகள் பலியாகி உள்ளது. விவசாய விளைநிலங்களும் சேதமடைந்துள்ளது. இவ்விழப்புகளுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும் விதமாக மத்திய அரசு, தமிழக அரசுக்கு வழங்கக்கூடிய நிவாரணத் தொகையை தாராளமாக வழங்கவும், நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கும்படியும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாகவும் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அமைச்சகள் முகாமிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, தகுந்த நிவாரணம் வழங்குவதோடு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கும் விவசாயக்கடன்களையும் முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

சமத்துவ மக்கள் கட்சியின் நிர்வாகிகளும், தொண்டர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல உதவிகளை வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.